# சமுர்த்தி பாதுகாப்பு வலையமைப்பின் முன்னேற்ற மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வு நிகழ்ச்சித்திட்டம் - 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2012 சனவரி 01 முதல் நவம்பர் 10 வரையான காலப்பகுதிக்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2012 நவம்பர் 10 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 சனவரி 01 முதல் நவம்பர் 10 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 நவம்பர் 10 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகை களுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஊ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, மீளாய்விற்குட்பட்ட காலத்திற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம் ரூபா 34,861,508 ஆனதுடன். 2012 நவம்பர் 10 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 37,832,916 ஆகும். மீளாய்விற்குட்பட்ட காலம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 நவம்பர் 10 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பனவற்றின் பொழிப்பினை பின்வரும் கூற்று காண்பிக்கிறது.

| செலவின வகுதி | செலவினம் | | |
|---|---|---|---|
| | 2012 சனவரி 01 முதல் நவம்பர் 10 வரையான காலப்பகுதிக்கானது | 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2012 நவம்பர் 10 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
| | ரூபா | ரூபா | ரூபா |
| பொருட்கள் | 8,928,228 | 956,300 | 9,884,528 |
| ஆலோசனை சேவைகள் | 19,037,411 | 1,695,305 | 20,832,716 |
| பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் கல்விச் சுற்றுலா | 6,674,142 | - | 6,674,142 |
| நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் | 221,727 | 219,803 | 441,530 |
| | 34,861,508 | 2,871,408 | 37,832,916 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்விற்குட்டபட்ட காலத்தின் போது இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன

| | ஐ.அ.டொலர் | இல. ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | 224,081 | 25,523,074 |
| கூட்டு:- | | |
| மீள் நிரப்பல்கள் | 70,405 | 9,389,147 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 3,314,533 |
| | 294,486 | 38,226,754 |
| கழி:- பற்றுதல்கள் | 231,276 | 30,007,825 |
| 2012 நவம்பர் 10 இல் உள்ளவாறான மீதி | 63,210 | 8,218,929 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்த நிகழ்ச்சித்திட்டக் காலத்திற்குள் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து நிகழிச்சித்திட்ட காலத்தையும் உள்ளடக்குவதற்காக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த ரீதியாக நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக் காட்டும் 12 உப கூறுகள் விபரமான செயற்பாட்டுத்திட்டம் என்பவற்றினை உள்ளடக்கும் 3 கூறுகளைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிகழ்ச்சித்திட்ட காலத்தின் இறுதிவரை அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டமானது 3 ஆண்டுகளிற்காக 2009 யூலை 10 இலிருந்து அமுலாகும் வகையில் அமுலாக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த இலக்குகளுக்கு இணங்க நிகழ்ச்சித்திட்டமானது செயற்பாடுத்தப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு ஏதாவது கண்காணிப்புச் செயன்முறை மேற்கொள்ளப்பட்டிருந்ததனை நிரூபிப்பதற்கான சான்றுகள் இருக்கவில்லை.

(இ) 2010 ஒக்தோபர் 29 ஆம் திகதிய சமூக பாதுகாப்பு தொழில் நுட்ப உதவி தூதுக் குழுவின் வரைவு உதவி ஞாபகக் குறிப்பின்படி, சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் முகாமைத்துவ தகவல் முறைமையின் (எம்ஐஎஸ்) மதிப்பீட்டு அறிக்கையினை 2012 யூன் அளவில் தயாரிக்க வேண்டும். எவ்வாறாயினும் 2013 மார்ச் 31 வரை சொல்லப்பட்ட வேலை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமுர்த்தி பாதுகாப்பு வலையமைப்பின் முன்னேற்ற மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் 2.03(இ) ஆம் பிரிவின்படி நிகழ்ச்சித்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை முடிவு திகதியின் பின்னர் ஐந்து மாதங்களிற்குப் பிந்தாமல் உலக வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும் சொல்லப்பட்ட அறிக்கை 2013 மார்ச் 31 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மானிய உடன்படிக்கையின்படி, நிகழ்ச்சித்திட்டமானது 2012 யூலை 09 ஆந் திகதி அல்லது அததற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டும். நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் இந்த திகதிக்கு பின்னரும் தொடர்ந்திருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்ட நீடிப்புக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிகழ்ச்சிதிட்ட இறுதியில் கலைத்தல் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிகழ்ச்சிதிட்டமானது அத்தகைய கணக்குகளைத் தயாரித்து 2013 மார்ச் 31 வரை அமுலாக்கல் முகவரிற்கு சொத்துக்களை கையளித்திருக்கவில்லை.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

நிகழ்ச்சிதிட்டத்திற்காக உலக வங்கியின் நிறுவன ரீதியான அபிவிருத்தி நிதியத்தால் (ஐடிஎவ்) உடன்பட்ட மொத்த மானியம் ஐ.அ.டொலர் 450,000 ஆனதுடன் 2012 நவம்பர் 10 வரை ஏற்பட்ட திரண்ட செலவினம் ஐ.அ.டொலர் 292,205.58 ஆக இருந்தது.இலங்கை அரசாங்க நிதியத்தின் ரூபா ஒரு மில்லியன் ஏற்பாடு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக கிடைத்திருந்தது. நிகழ்ச்சித்திட்ட காலத்தின் போது ஏற்பட்ட உண்மையான செலவினங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | உண்மையான செலவினம் | திரண்ட செலவினம் | மானியத்தின் சதவீதமாக நிதிகளின் பயன்பாடு |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | % |
| 2009 | - | - | - |
| 2010 | 899.90 | 899.90 | 0.20 |
| 2011 | 65,114.58 | 66,014.48 | 14.67 |
| 2012 | 226,191.10 | 292,205.58 | 64.93 |

**4.2. பௌதீக செயலாற்றல்**

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 2012 நவம்பர் 10 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டு மொத்த துறைவாரியாக பௌதீக செயலாற்றல் கீழே தரப்படுகின்றது.

| **செயற்பாடு** | **நிலை** |
|---|---|
| சமுர்த்தி பாதுகாப்பு வலையமைப்பின் முன்னேற்ற மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முறை மற்றும் முறைமைக் கல்வி | பூர்த்தியாக்கப்பட்டது |
| முறைமையை விருத்தி செய்தல் | பூர்த்தியாக்கப்பட்டது |
| சுதந்திரமான மதிப்பாய்வு | செய்யப்படவில்லை |
| செயற்பாட்டு கைநூல் தயாரித்தல் | செய்யப்படவில்லை |
| மென்பொருள் தரக் காப்பீடு | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது |
| முகாமைத்துவ தகவல் முறைமையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிற்சியினை நடாத்துவதற்கு பயிற்சியாளர் மற்றும் அமைவிடம் | பகுதியளவு பூர்த்தியாக்கப்பட்டது |
| மாவட்ட வாரியான விழிப்புணர்வு முகாமையாளர் பயிற்சியளித்தல் நிகழ்வு | பகுதியளவு பூர்த்தியாக்கப்பட்டது |

| | |
|---|---|
| ஒரே உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தை வெளிப்படுத்துதல் மீதான சாத்தியவளக் கற்கை | செய்யப்படவில்லை |
| சமுர்த்தி ஆணையாளர் நாயக திணைக்களத்திற்கான கணனி வேலைசெய்யும் இடம் மற்றும் மடி கணனிகள் | பூர்த்தியாக்கப்பட்டது |
| 13 முன்னோடி அமைவிடங்களிற்கான கணனி வேலைசெய்யும் இடங்கள் | பூர்த்தியாக்கப்பட்டது |
| முறைமை செயற்பாடுகளிற்கான பிரதான வன்பொருள் மற்றும் வலையமைப்பு | பூர்த்தியாக்கப்பட்டது |